

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஐரோப்பாவில் நடைபெறும் Monaco energy boat challenge எனப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் போட்டியில் பங்கேற்பதற்காக தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்வாகியுள்ள கோவையைச் சேர்ந்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது, மாற்று எரிபொருள் சக்தியாக பேட்டரி மூலம் இயங்கும் படகை வடிவமைத்து போட்டியில் கலந்து கொள்ள உள்ளதாக கூறிய மாணவர்களின் முயற்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டியதோடு மட்டுமின்றி மாணவர்களின் புது முயற்சி வெல்லட்டும் என்றும் வாழ்த்தினார்.



‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வ தேச டென்னிஸ் போட்டிகளில் வெற்றிகளை குவித்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்வி சேகர் குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆஸ்திரேலிய ஓபன் & ஸ்லோவேனியா ஓபன் டென்னிஸ் தொடர்களில் சாம்பியன் பட்டமும் – Polish Deaf Open Tennis போட்டியில் 3 ஆம் இடமும் வென்ற அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தங்களது வெற்றிப் பயணம் தொடர நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்று பாராட்டினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த சர்வதேச ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா, ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ விருதை பெற்றதை தொடர்ந்து நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஸ்குவாஷ் விளையாட்டில் தொடர் சாதனைகளை படைத்துவரும், சர்வதேச அரங்கில் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை தேடித் தந்துவரும் அவரது வெற்றிப்பயணம் தொடர வாழ்த்தினார்.

## அனைத்துச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருப்பது கட்டாயமாகும்!

## இந்திய அரசியலமைப்பின் 348-வது பிரிவை நீக்கும் வகையில்

# ஒன்றிய அரசு உருவாக்கிய மூன்று புதிய சட்டங்களை நிறுத்தி வைத்திடுவீர்!

## ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை,ஜூன்.20-**

**இந்திய அரசியலமைப்பின் 348 வது பிரிவை மீறும் வகையில் இந்தியத் தண்டனை சட்டங்களுக்குப் பதிலாக ஒன்றிய அரசு உருவாக்கியுள்ள மூன்று புதிய சட்டங்களை மறுபரிசீலனை செய்திடவும் அவற்றை நிறுத்திவைத்திடவும் ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

**அக்கடிதம் வருமாறு:**

தற்போதுள்ள இந்திய தண்டனைச் சட்டம், 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ஆகியவற்றை ரத்து செய்து ஒன்றிய அரசு இயற்றிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவதில் மாநிலம் எதிர்கொள்ளும் சில ஆட்சேபணைகள் மற்றும் சிக்கல்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மற்றும் இந்திய ஆதாரச் சட்டம், 1872, 01.07.2024 முதல் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளது.

மேற்கூறிய மூன்று சட்டங்களின் மாற்றீடு போதிய ஆலோசனைகள் மற்றும் ஆலோசனைகள் இன்றி அவசரமாகச் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்கள் இந்திய அரசியலமைப்பின் கூட்டுப் பட்டியல் IIIக்குள் அடங்கும், எனவே மாநில அரசுடன் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டிருக்க வேண்டும். மாநிலங்களுக்கு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க போதிய அவகாசம் வழங்கப்படாததால், எதிர்க்கட்சிகள் பங்கேற்காமல் புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

**சமஸ்கிருதத்தில் பெயரிடப்பட்டுள்ளன!**

பாரதிய நியாயா சன்ஹிதா (BNS), 2023; பாரதிய நாக்ரிக் சுரக்ஷா சன்ஹிதா (பிஎன்எஸ்எஸ்), 2023; பாரதிய சாக்ஷ்யா ஆதினியம் (பிஎஸ்ஏ), 2023 ஆகிய மூன்று சட்டங்களும் சமஸ்கிருதத்தில் பெயரிடப்பட்டுள்ளன, இது இந்திய அரசியலமைப்பின் 348 வது பிரிவை தெளிவாக மீறுகிறது. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருப்பது கட்டாயமாகும்.

**சட்டங்களில் அடிப்படை பிழைகள்!**

கூடுதலாக, இந்தச் சட்டங்களில் சில அடிப்படைப் பிழைகள் உள்ளன. உதாரணமாக, பாரதியவின் பிரிவு 103 நியாயா சன்ஹிதா (BNS)க்கு இரண்டு வெவ்வேறு வகை கொலைகளுக்கு இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. ஆனால் இவை இரண்டும் ஒரே தண்டனையைக் கொண்டுள்ளது. BNSல் இன்னும் சில விதிகள் உள்ளன, அவை தெளிவற்ற அல்லது சுய முரண்பாடானவை.

மேலும், இந்தப் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மற்றும் Law College மாணவர்களுக்கான பாடத்திட்டத்தைத் திருத்து வதற்கு போதுமான நேரம் தேவைப்படும். பங்குதாரர் துறைகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் பிற தொழில்நுட்பத் தேவைகள் அதாவது, நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலைகள், வழக்கு விசாரணை மற்றும் தடயவியல் ஆகியவற்றிற்கு போதுமான ஆதாரங்களும் நேரமும் தேவை. அவசரமாகச் செய்ய முடியாத தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்து, புதிய விதிகளை உருவாக்குவதும், தற்போதுள்ள படிவங்கள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளைத் திருத்துவதும் கட்டாயமாகும்.

**மறு பரிசீலனை செய்ய வேண்டும்!**

மேற்கூறியவற்றின் அடிப்படையில், அனைத்து மாநிலங்கள் மற்றும் பிற முக்கிய அமைப்புகளின் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு புதிய சட்டங்களை மறுபரிசீலனை செய்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேற்கூறிய சட்டங்களை நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.




செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை கிராமத்திற்கு உட்பட்ட கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் Round Table India and Ladies Circle India மற்றும் STS Foundation Public Charitable Trust ஆகிய தொண்டு நிறுவனங்களின் சார்பில் ரூ.123.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய 4 வகுப்பறைகளையும், மாணவர்களுக்கான நவீன சுகாதார வளாகத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் திறந்து வைத்தனர். உடன் நம்ம ஸ்கூல் திட்டத்தின் உறுப்பினர் செயலர் இரா.சுதன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சார் ஆட்சியர் நாராயண சர்மா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கற்பகம், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சோபனா தங்கம் சுந்தர், Round Table India செயலாளர் திருமதி.சுகந்திஸ்ரீ, நன்கொடையாளர்கள் ராஜகுமார், சுந்தர் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை கிராமத்திற்கு உட்பட்ட கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் Round Table India and Ladies Circle India மற்றும் STS Foundation Public Charitable Trust ஆகிய தொண்டு நிறுவனங்களின் சார்பில் ரூ.123.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய 4 வகுப்பறைகளையும், மாணவர்களுக்கான நவீன சுகாதார வளாகத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் திறந்து வைத்தனர். உடன் நம்ம ஸ்கூல் திட்டத்தின் உறுப்பினர் செயலர் இரா.சுதன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சார் ஆட்சியர் நாராயண சர்மா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கற்பகம், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சோபனா தங்கம் சுந்தர், Round Table India செயலாளர் திருமதி.சுகந்திஸ்ரீ, நன்கொடையாளர்கள் ராஜகுமார், சுந்தர் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.